"நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்" என்பது பழமொழி நோய்க்கு இடங்கொடேல் என்பது ஔவையின் அறிவுரை. நோயால் உடல்நலம் குன்றுவதுப்போல, தீய எண்ணங்களால் மனநலமும் குன்றிவிடுகிறது. ஆகையால், ஒரு மனிதன் ஆரோக்கியமாக இருப்பது உடலில் நோயில்லாமல் இருந்தால் மட்டும் போதாது. நலம் என்பது உடல் மற்றும் மனம் அனைத்திலும் முழுமைபெற்று இருக்க வேண்டும்.

வாழ்வது ஒரு கலை :–

மனம் போல வாழ்வு என்பது முன்னோர்களின் வாக்கு. நாம் எப்படி எண்ணுகிறோமோ, அப்படித்தான் எல்லாம் நடக்கும். நாம் எதை எண்ணுகிறோமோ, அதைச் சுற்றித்தான் எல்லாக் காரியங்களும் நடக்கும் நல்லதே நினைத்தால் நல்லதே நடக்கும்.

உடல் நலம், மனநலம் :–

உடல்நலமும் மனநலமும் சேர்ந்தது தான் மனிதநலம். "மருந்து என வேண்டாவாம் யாக்கைக்கு அருந்தியது அற்றது போற்றி உணின்" என்ற வள்ளுவப் பெருந்தகையின் வாக்கிற்கிணங்க, உணவினை முன்பு உண்டது செரித்தது அறிந்து பின்பு, உண்பவனுக்கு மருந்து என எதுவும் தேவையில்லை. அறிவியல் தொழில்நுட்பம் அறிமுகமில்லாத அன்றைய காலகட்டத்தில் கூட நம் முன்னோர்கள் வாழ்ந்தனர். இன்றைய நவீனயுகமானது பலவித தூண்டுதல்களால் மனிதனின் மனதை மாற்றியதோடு, அவனது வாழ்க்கை முறை மற்றும் உணவுப்பழக்கத்திலும் மாற்றத்தை உண்டாக்கத் தவறவில்லை. இதனால் ஆரோக்கியத்தைப் பாதிக்கின்ற பலதரப்பட்ட காரணிகள் நம்முன் பரந்து காணப்படுகிறது.

இக்காலமனிதனின் பழக்கங்கள் :–

"தட்டில் மிச்சம் வைக்காதே ; வயிற்றில் மிச்சம் வை" என்ற கருத்தை பின்பற்றாது, கட்டுப்பாடு என்ற ஒன்றை கைக் கொள்ள மறந்து தடம் மாறி உடல்நலத்தை பாழாக்குகிறான். இத்தகைய நிலைக்கு முக்கியக் காரணம் கட்டுங்கடங்காத ஆசையும், அதிக அளவு பணமும் தான். மனிதன் நலத்தோடு வாழ தன் வாழ்க்கை முறையை மாற்ற வேண்டிய கட்டாயத்திற்குத் தள்ளப்பட்டுள்ளான். மாற்றம் ஒன்றே மாறாதது என்பதற்கிணங்க, உலக நவீனமயமாதலால் மனிதனின் வாழ்க்கையானது அன்றாட வாழ்க்கை முறை, உண்ணும் முறை போன்றவற்றில் மாற்றம் கண்டு நோய் என்ற ஆபத்தை நோக்கி சென்றுள்ளது. அறிவியலானது, நமக்கு வசதியான மற்றும் முன்னேற்றம் மிக்க வாழ்க்கையைக் கொடுத்தது என்றாலும், ஆரோக்கியத்தின் தரத்தை தருவதில் தவறிவிட்டது என்றே கூற வேண்டும்.

பழக்கத்தினால் ஏற்படும் நோய்கள் :–

இத்தகைய மாறுப்பட்ட வாழ்க்கை முறையால், உண்டான கொடூர நோய்களில் மனித குலம் கண்விழித்தது. அத்தகைய நோய்களில் மன அழுத்தம் முன்னிலையில் உள்ளது. மன அழுத்தமானது, நீரழிவு நோய், ரத்த அழுத்தம், தூக்கமின்மை, போதைப் பழக்கம் போன்ற பிற நோய்களையும் துணைக்கழைத்து வருகின்றது.

முடிவுரை :

"உடலில் உறுதி உடையவரே......" உலகில் இன்பம் உடையவராம்,

என்பார் கவிமணி. இளமை முதலே உடற்பயிற்சி செய்து, நல்ல பழக்கங்களை மேற்கொண்டு, உடலைப் பேணுவோமாக ! நலமே பூணுவோமாக ! இன்பமே காணுவோமாக ! மனமும் உடலும் ஒன்றையொன்று சார்ந்து, இணைந்து செயல்படுகின்றன. மனநலம் சரியாக இருந்தால், உடல்நலம் தானாக சரியாகிவிடும்.

எண்ணங்களே மன வலிமை

ஒரு பெண்மணி ஒருத்தர் இருந்தார். அவர் அலுவலகத்தில் பணி செய்து வந்தார். அவருக்கு ரோஜாப்பூக்கள் என்றாலே பிடிக்காது. அவருக்கு ரோஜாப் பூக்களால் ஒவ்வாமை இருந்தது.

ரோஜாப் பூக்களைப் பார்த்தாலே தலைவலி வந்துவிடும், மூக்கு அடைத்து கொள்ளும்.

ஒரு முறை அவரின் அலுவலகத்தில் கூட்டம் ஒன்றிற்கு திட்டமிடப்பட்டிருந்தது. அப்பெண்மணியும் கூட்டத்தில் பங்கேற்க கூட்டம் நடைபெறும் அறைக்குச் சென்றார்.

அந்த அறையில் ஆயிரம் கணக்கான ரோஜாக்கள் அலங்காரத்திற்காக வைக்கப்பட்டிருந்தன. இதனைக் கண்டவுடன் அவர் அதிர்ந்து போனார்.

அவருக்கு உடனே தலைவலித்தது, மூக்கு அடைப்பு ஏற்பட்டது. இந்த நிலையில் எவ்வாறு கூட்டத்தில் பங்கேற்க முடியும் என்று எண்ணி நிலைகுலைந்து போனார்.

அப்போது அங்கு இருந்த அலுவலர் இந்த பூக்களைப் பார்க்க உண்மையான பூக்களைப் போலவே உள்ளது என்றார்.

அப்போது தான் அந்த பெண்மணி அந்தப் பூக்கள் காகிதப் பூக்கள் என்று உணர்ந்தார். உடனே, அவர் இயல்பு நிலைக்கு அடுத்த வினாடியே வந்து விட்டார்.

இது நம் மனவலிமையைக் காட்டுகின்றது. நம் மனம் எவ்வளவு வலிமையுடையது என்பது புலப்படுகின்றது. எனவே வலிமையான எண்ணங்களை வளர்ப்போம்.

தோற்றுப் போனது மனித இனம்

உலகில் மனிதனை
வைரஸ் ஆக்கிரமிக்க,
கொரோனா என்னும்
இயற்கை சேவகன் சொல்லி
அடிப்பதும் ஓர் நிகழ்வே....
மனிதன் அழித்த,
மிருகங்களும் மரங்களும் பறவைகளும்
ஏன் இயற்கையும்
விட்ட சாபங்களில் ஒன்று தான் கொரோனா !
வன்மம் கலந்த வாய் சொற்கள்
குறைந்து அழிந்ததே,
நாளும் நடமாட முகக் கவசமே
உயிர்மூச்சு கவசமாய் ஆனதால்,
மனித குறைகளைக் கேட்ட
பல நில கடவுள்களும்,
தங்கள் இருப்பிடத்துக்கு விடுமுறை அளித்ததும் ஏனோ?
மனிதன் இயற்கையன்பு
மனிதம் மறந்தால்
மீண்டும் ஓர் கொரோனா
தொற்று மனிதரை மறு உருவில்....!

நீ. அன்பரசி
இரண்டாம் ஆண்டு கணிதவியல்

பழகி போகும்

ஆயிரம் உறவுகள்,
என் அருகில் இருந்தும்
தனிமையை பழகி கொண்டேன்...

ஆயிரம் நண்பர்கள்,
இருந்தும் தனிமை பழகி போனதே...

என்னில்,
பல ஆசைகள் கனவுகள் இருந்தும்,
தனிமை பழகி போனதே....

உயிரை துரத்த தொடங்கிய,
என் நேசமும் பழகி போனதே...

நான் தாயென்று
ஆன பின்பும்,
என் பாசமும் மறந்து போகுமோ ?

ஆயிரம் ஆண்டுகள் ஆனாலும்,
என் தனிமை மாறாதே !
இது கடந்து போகாதே
என் தனிமை வாழ்க்கையில் ....

ஜோதி பிரியா குமார்
மூன்றாவது ஊட்டச்சத்து &
உணவு கட்டுபாட்டியல்

கரை சேர கரமுண்டு

சுட்டெரிக்கும் சூரியனும்
நொடியில்,
உறைந்து போகும் !

அடித்தவன் அணைக்கலாம்
அணைத்தவன் அடிக்கலாம்,
பிடித்தவன் வெறுக்கலாம்
வெறுத்தவனுக்கும் பிடிக்கலாம்...

பணம் படைத்தவன்
ஏழை ஆகலாம்,
வறுமையில் இருப்பவன்
பணக்காரன் ஆகலாம்.

இன்றைய தோல்வி
நாளைய வெற்றியாகும்,
கண்ட வெற்றி
கணத்தில் மறைந்து போகும்

செல்லும் பாதையில்
முட்கள் இருந்தாலும்,
சேரும் பாதை
பூவால் முடியும்
யாருக்குத் தெரியும் ?

கவலை உனக்கிருந்தால்
கிடப்பில் கிடந்திடாதே,
ஏதோ மனமில்லாமல்
எதற்கோ நடந்திடாதே !

கண் வடியும் கண்ணீரும்
கரை சேர கரமுண்டு,
கரமில்லா கண்ணீருக்கும்
புவியில் இடமுண்டு...

இருப்பதை வைத்து
யாரென்று எண்ணாதே,
இல்லாதவன் ஆண்டி
என்று தவறுகள் பண்ணாதே....!

உடல் நலமும், மன நலமும்

"மருந்து என வேண்டாவாம் யாக்கைக்கு அருந்தியது
அற்றது போற்றி உணின்".

என்ற வள்ளுவப் பெருந்தகையின் வாக்கிற்கிணங்க

மன நலம் :

நமது சமுதயம் ஆரோக்கியமான மக்களைத் தன்னுள் அடக்கி உள்ளதா? 2015 – 16 தேசிய மனநல சுகாதார ஆய்வின்படி, இந்தியாவின் மக்கள் தொகையில் குறிப்பிட்ட அளவு மக்கள் மன நலபாதிப்பில் உள்ளனர். இதில் வேதனைக்குரியது என்வென்றால், இவற்றில் 70 முதல் 92% சதவீத மக்கள் தங்கள் மன நலனுக்காக, சிகிச்சை பெற தவறிவிட்டதாக இதே ஆய்வு கூறுகிறது.

இந்தியாவில் தான் மன அழுத்தத்தால் பாதிக்கப்பட்டவர்கள் அதிகமாக உள்ளதாக கணக்கெடுப்பு கூறுகிறது. மாற்றம் ஒன்றே மாறாதது என்பதற்கிணங்க, உலக நவீன மயமாதலால் மனிதனின் வாழ்க்கையானது அன்றாட வாழ்க்கை முறை, உணவு முறை போன்றவற்றில் மாற்றம் கண்டு, நோய் என்ற ஆபத்தை நோக்கி சென்றுள்ளது. அறிவியலானது நமக்கு வசதியான மற்றும் முன்னேற்றம் மிக்க வாழ்க்கையைக் கொடுத்தது என்றாலும், ஆரோக்கியத்தின் தரத்தை தருவதில் தவறிவிட்டது என்றே கூற வேண்டும். இத்தகைய மாறுபட்ட வாழ்க்கை முறையால், உண்டான கொடூர நோய்களின் மனித குலம் கண்விழித்தது. அத்தகைய நோய்களில் மன அழுத்தம் முன்னிலையில் உள்ளது. மன அழுத்தமானது, நீரழிவு நோய், இரத்த அழுத்தம், தூக்கமின்மை, போதை பழக்கம் போன்ற பிற நோய்களையும் துணைக்கழைத்து வருகின்றது.

மன அழுத்தத்தின் பாதிப்பு :

அன்றைய காலகட்டத்திலும் மன அழுத்தம் என்பது இல்லை எனக்கூறிவியலாது. ஆனால், அன்றைய மக்கள் உடற்பயிற்சி, உடல் உழைப்பு, அன்றாட வேலைகள் போன்றவற்றில் கவனத்தை செலுத்தி உடல்நலத்தை சீராக பராமரித்தனர். இன்றைய மக்கள் அதீத மன உளைச்சலால், இதனை மேற்க்கொள்ளும் பொறுமையும், மனப்பக்குவமின்றி தற்கொலை என்ற எதிர்மறை எண்ணத்தை நோக்கிப் பயணிக்கின்றனர். ஒவ்வொரு நாளும், மொத்த தற்கொலை சதவீதத்தில் 6.23 சதவீதம் வரை மாணவர்கள் தற்கொலை செய்து மிகவும் வருத்ததிற்குரியது.

மன அழுத்தத்திலிருந்து காப்பாற்றுவது :

உடற்பயிற்ச்சிக்கும் ஆரோக்கியதிற்கும் முக்கியத்துவம் அளிக்கின்ற செயல்பாடுகளை பள்ளி, கல்லூரிகளில் நடைமுறைப்படுத்த வேண்டும். விளையாட்டின் மீதுள்ள ஆர்வம் கல்வியைப் பாதிக்கும் என்ற ஒரு தவறான புரிதல் பெற்றோர்களிடம் காணப்படுகிறது. ஆனால், அது உண்மை இல்லை விளையாட்டில் ஆர்வத்துடன் செயல்படும் மாணவர்கள், கல்வியிலும் சிறந்து விளங்குவதாக ஆய்வுகளின் முடிவு கூறிகிறது. விளையாட்டு உடலில் தேங்கியுள்ள தேவையற்ற கழிவுகளை, வெளியேற்ற நல்லதொரு களைப்பை உண்டாக்கி சீரான உடல் இயக்கத்திற்கு வழிவகுக்கிறது. இதனால் மன இறுக்கம், தளர்ச்சி, அழுத்தம் போன்றவை சீராகி மன அழுத்தம் உண்டாக்கும் ஹார்மோன்களை மாற்றக்கூடிய திறனை உடலிற்கு அளிக்கிறது. இதனால் நோய் எதிர்ப்பு ஆற்றல் அதிகரிக்கிறது.

மன நலம் – உடல் நலம் பேணுவது :

1948 –ல் தேசிய சுகாதார சேவை நிறுவப்பட்டதிலிருந்து, உடல் நலம் மற்றும் மனநல பாதுகாப்பு ஆகியவை பெரும்பாலும் பிரிக்கப்பட்டு விட்டனர். இதனால் உளவியல் நல்வாழ்வை கருத்தில் கொண்டு சுகாதார வல்லுநர்களும், மனநல ஆலோசகர்களும் அதிகரித்து வருகின்றனர். நம் மனதையும் உடலையும், நாம்தான் கட்டுப்படுத்தி நிர்வகிக்க வேண்டும். இத்தகைய எண்ணத்தை இளைய தலைமுறையினரின் மனதில் பதிய வைக்க வேண்டும். இளைஞர்கள் நம் நாட்டின் இதயம் போன்றவர்கள் இதயம் பலவீனமானால் மற்ற அனைத்தும் சீராக இல்லாமல் போய்விடும்.

“மனநலத்தின் ஆகும் மறுமைமற் றஃதும்

இன நலத்தின் ஏமாப் புடைத்து”.

ஒருவனுக்கு மனத்தின் நன்மையினால் மறுமையின்பம் உண்டாகும்; அம்மனநலமும் இனத்தின் நலத்தினால் வலிமைபெறும் என்று வள்ளுவர் கூறினார்.

மன, உடல் ஆரோக்கியத்தை சீராக வைக்க சில எளிய வழிமுறைகள் :

- 18 முதல் 64 வயது வரை உள்ளவர்களுக்கு வாரத்தில் குறைந்தபட்சம் 150 நிமிடங்களுக்கு மிதமான உடற்பயிற்சியும் அல்லும் 75 நிமிடங்களுக்கு கடினமான உடற்பயிற்சியும் மேற்கொள்ளலாம்.
- 5 முதல் 7 வயது வரை உள்ளவர்கள் குறைந்தபட்சம் தினமும் 60 நிமிடங்கள் வரை மிதமான மற்றம் கடினமான உடற்பயிற்சி மேற்கொள்ளலாம்.
- குடும்பத்துடன் ஒரு வேளையாவது பேசி மகிழ்ந்து உணவு உண்ண வேண்டும்.
- எத்தனை இறுக்கமான சூழலாக இருந்தாலும் சிரிக்க கற்றுக் கொண்டால் பல பிரச்சனை காணாமல்போய்விடும்.
- வேலைகளைத் தள்ளிவைப்பது மன அழுத்தத்தை அதிகரிக்கும். செய்ய வேண்டியதை தாமதப்படுத்தாமல் செய்யுங்கள்.
- வீட்டு வளாகத்தில் சிறிய தோட்டம் அமைத்து அதன் பணியில் களமிறங்கினால் வேலை செய்த திருப்தியும் தரமான காய்கறிகள் கிடைத்த மகிழ்ச்சியும் கிடைக்கும்.
- தன்னைப் பற்றி மட்டுமேநினைத்துக் கொண்டிருப்பவர்கள் எப்பொழுதும் படபடப்புடனே இருப்பார்கள். ஆகவே பிறரைப் பற்றியும் சிந்தியுங்கள். இதனால் உங்கள் சிந்தனை பேச்சு இரண்டும் தெளிவாகும்.
- தோல்விகளை எதிர்நோக்கும் மனப்பக்குவத்தை வளர்க்க விளையாட்டு மிக முக்கியம்.

- மனதையும் இருக்கும் இடத்தையும் சுத்தமாக வைத்து கொள்ளுங்கள், இவற்றில் சிலவற்றைப் பின் பற்றினாலே ஆரோக்கியம் மற்றும் மன அழுத்தமற்ற வாழ்க்கை வசப்படும்.

வாழ்க்கை நம் கையில் !

நாமே நம்மைஆள வேண்டும் !

திருக்குறள் :

“மனத்தானாம் மாந்தர்க் குணர்ச்சி இனத்தானாம்

இன்னான் எனப்படுஞ் சொல்”

மனிதருக்கு பொதுவான அறிவு, அவர் மனம் காரணமாக உண்டாகும்; இவன் இத்தகையவன் என்று உலகத்தவரால் சொல்லப்படும் சொல், இனம் காரணமாக உண்டாகும்.

“மனநலம் மன்னுயிர்க் காக்கம் இனநலம்

எல்லாப் புகழும் தரும்”.

நிலைபெற்ற உயிர்களுக்கு மனத்தூய்மை செல்வத்தை கொடுக்கும், இனத்தூய்மை அதனோடு எல்லாப் புகழையும் தரும்.

மோ. ரக்ஷிதா
முதலாம் ஆண்டு உயிரி தொழில் நுட்பத்துறை

தோல்வியே வெற்றிக்கு முதற்படி

வாழ்க்கை என்பது ஓர் இனிய அனுபவம், உலக உண்மைகளை அறிந்து கொள்ளும் அறிவு மனிதன் மகத்தானவனாக ஆக்கும் முயற்சி தான் வாழ்க்கை.

மனித வாழ்வில், ஏராளமான பிரச்சனைகள் நம்மை தினந்தோறும் மோதுகின்றன. நாம் வாழ்வில் நமக்கு நிகழும் சோதனைகளையும், நம் வாழ்வில் ஏற்படும் சம்பவங்களையும் யோசித்துப் பார்த்தோமானால் , பல சமயம் நமக்குத் தோல்வியும், ஏமாற்றமும், துன்பங்களும் தான் வருகின்றன. வாழ்வில் ஏற்படும் தோல்விகளுக்கும், கஷ்டங்களுக்கும் காரணம் நாம் எடுத்த முடிவுதான் என்பது புரியவரும்.

சம்பளம் இல்லாமல், நம் குடும்பத்தின் மனைவி என்ற ஒரு பெண் நம்மைநம்பி தன் வாழ்க்கையை நமக்காக அர்ப்பணித் திருக்கிறாள். தெய்வீக அன்புடன், நம் குழந்தைகள் என்ற அவர்களின் எதிர்காலம் பற்றிய கற்பனை, அதற்கான முயற்சி வாழ்வில் தான் எத்தனை எத்தனை சந்தோஷங்கள், ஆனந்தங்கள் இருக்கின்றன.

நமது குழந்தைகளுடனும், மனைவியுடனும் பெற்றோருடனும் இசைபட வாழ்தல், இணைந்து அனுசரித்து பெருமையுடன் வாழ்வது இருக்கிறதே, அதுவும் ஊருக்கு உதவியாக இருப்பதும் தான் பெரிய பாக்கியம்.

இல்லாதவர்களுக்கு கொடுப்பதில், உதவுவதில் தான் வாழ்வின் அர்த்தம் புரிகிறது? இந்த பிரபஞ்சத்துடனும், இசைபட வாழ்வது இருக்கிறதே, அது எவ்வளவு பெரிய பாக்கியம், எவ்வளவு பெரிய ஆனந்தம்.

பிறர் பாராட்டையும், ஆமோதிப்பபையும், அங்கீகாரத்தையும் பற்றி லட்சியம் செய்யாமல் நாம் நம் பணியில், கொள்கையில் ஈடுபடுவோமானால் பாராட்டும், புகழும் பூனை வால் போல் நம்மைத் தொடர்ந்து வரும்.

வாழ்க்கைக்கு வேண்டிய ஒரு முக்கியமான குணம் – அதிகம் அலசி ஆராயப்படாதது ஒன்று இருக்கிறதென்றால் அது சுயகட்டுப்பாடு தான். வாழ்வில் கட்டுப்பாட்டை மேற்கொள்பவர்கள் தான் வெற்றி அடைகின்றனர். நம்மை நாமே ஒரு கட்டுப்பாட்டில் வைத்திருப்பதன் மூலம், புற சூழ்நிலையையும் நாம் கட்டுப்படுத்துகிறோம்.

பலகீன மனம் மனிதர்களை சோகத்தில் ஆழ்த்துகிறது. வாழ்க்கையே வேண்டாம், உலகமேவேண்டாம், என்பது தீர்மானிக்கச் செய்து உயிரையே போக்கிக் கொள்ளும் நிலைக்குத் தள்ளுகிறது. பிரச்சனைகள் நமக்கு கஷ்டத்தையும், துன்பத்தையும் கொடுக்கக்கூடும். நாம் அவதிப்படுவோம். இது உலகில் நிரந்தரமானது. இதை எப்படி சமாளிக்கலாம் என்று தீர்மானிக்கத் துவங்கினோமானால் நிச்சயமாக நமது மனமே நமக்கு ஒரு வழியைக் காட்டும்.

பயம், கோபம், பொறமை, குற்ற உணர்வு, கவலை இவற்றைத் தாழ்த்தும் உணர்ச்சிகள் என்று கூறுகின்றனர். இந்தக் கீழ் உணர்வுகள் மனிதனது சிந்திக்கும் திறனை, சிந்திக்கும் அமைப்பை முடக்கி விடுகிறது என்று கூறுகின்றனர்; மன சிகிச்சை மருத்துவர்கள் முடக்கப்பட்ட, மனம் செயலற்றுப் போகிறது. முடக்கப்படுவது மட்டுமல்ல, நமக்கு நல்ல யோசனைகளையும், நம்பிக்கையையும் கொண்டு தந்து உதவக் கூடிய நமது மனதின் வாயிற்கதவை இவை சாத்திவிடுகின்றன.

தோல்வி வந்ததென்றால் கலங்காதீர்கள், நீங்கள் சரியான பாதையில் தான் செல்கிறீர்கள். ஆனால், தோல்விகளைத் தாண்டித்தான் போக வேண்டும் வெற்றி பெற.

முதல் வெற்றி சிலநேரம் நமக்கு ஒரு அசாதாரண நம்பிக்கையை ஏற்படுத்தி விடுகிறது எடுத்ததெல்லாம், வெற்றியடையும் என்ற ஒரு போலி நம்பிக்கையை ஏற்படுத்தி விடுகிறது. நமது ஆணவத்தை வளர்த்து விடுகிறது.

தோல்வி ஏற்பட்டிருந்தால் ஒரு நிதானம் இருந்திருக்கும் ஒரு பயம் – ஒரு கவனம் இருந்திருக்கும், ஒரு அடக்கம் ஏற்பட்டிருக்கும். அடக்கம், கவனம், நிதானம் – இவற்றை எல்லாம் தோல்விதான் தருகிறது. எனவேதான், தோல்வி ஒரு பாடம் என்று சொல்கின்றனர்.

தோல்வி நமக்கு பாடம் புகட்டுகிறது மாறாக, வெற்றியில் நாம் எதையும் கற்றுக் கொள்வதில்லை சரியான பாதையில் சென்றிருக்கிறோம் என்பதைத் தவிர அந்த உண்மைகூட வெற்றி பற்றி சிந்திக்கும் போது தான் புலப்படுகிறது.

ரா. சிரீஷா
இரண்டாம் ஆண்டு கணினி துறை

நிரந்தரம் எதுவுமில்லை

வெளிச்சம் தேடி
ஏழை மக்களின் வாழ்வை
இருளாக்கி,
எத்தனையோ கோடிகளை
எளிதில் தனதாக்கி
ஆலயச் சன்னதியில்,
ஆண்டவனுக்கு
"வெளிச்சம்" போடும்
வீணர்களின் வாழ்வு
இருளாகும்,
அந்நாளே ஏழைகளின் வாழ்வில்
வெளிச்சத்தின் விடியல் !

உண்மைவெளிச்சத்தில்
தெரியுது,
இவன் இதயமுள்ள மனிதனல்ல
இடம்மாறும் எலும்புக்கூடு என்பது

தைரியமாக இருங்கள்
ஆபத்துக்களை விட்டு
விலகி ஓடாதீர்கள்,
அவற்றை
எதிர்கொள்ளுங்கள்
ஏனெனில்,
அனுபவத்துக்கு மாற்று
என்று ஒன்று இல்லவே இல்லை

நமக்கு நாமே
ஆறுதல் கூறும்,
மன தைரியம்
இருந்தால் அனைத்தையும்
கடந்து போகலாம் !

விடியும் என்ற எண்ணத்தில்
உறங்க செல்லும் நீ முடியும்,
என்ற எண்ணத்தோடு எழுந்திரு
அனைத்தையும் சாதிக்கலாம் !

சீ. மதுவதி
முதுகலை முதலாம் ஆண்டு வணிகவியல்

சிறந்த பரிசு

காலை எழுந்து கண்முடி தியானத்தில்
கருத்தை இருத்தல் நலம்,
நடையும் ஓட்டமும் நாளும் பழகினால்
அடையும் நன்மைபல,
உடலும் மனமும் ஓய்ந்திருந்தால்
வாழ்வில்
கடலாய் பெருகும் கடன் ;
அளவாய் தூக்கம் அறுசுவை உணவு
நலமாய் வாழும் நிலை
ஆட்டமும் ஓட்டமும் நன்றாம் சிறுவர்தம்
நாட்டம் அதிலே நிறுத்து....

மின் விளக்கேற்றி
தன் இருள் போக்க எண்ணும்
மானுடா...!
இருள் எது – என
உணர்ந்தே
உணர்ந்தே உன் ஒளி தேடு,
தனக்கென்று தனக்கென்று
எல்லாம் தேடி
தனக்கேதும் கிட்டாது – என்று
தெரிந்தும்,
மண் சார்ந்த வாழ்க்கை முறையையும்
தொடர்புபடுத்தி, வாழ்க்கையையும்
வாழ்க்கை முறையையும் அணுகி, மக்கள் தங்களுடைய
பிரச்சனைகளையும், சவால்களையும் எதிர்கொண்டு
வெற்றி பெற உதவும் வகையில், மனித வாழ்க்கை
என்ற மிகச்சிறந்த பரிசை வடிவமைத்துள்ளார்....

தன்நலத்தோடு வாழும்
மனிதா,
இருள் எது–என
உணர்ந்தே
உன் ஒளி தேடு,
வெளிச்சம் என்பது
வெறும் விளக்கேற்றி
பெறுவதில்லை,
மனத்தன்
இருள் அகற்றி
இறையின் ஒளியில்
வெளிச்சம் காண்போம் !

கே. மம்மா
முதுகலை முதலாம் ஆண்டு வணிகவியல்

தைரியம் என்னும் வாள்

வாழ்க்கை ஒரு போர்களம்
மனதைரியம் என்ற ஆயுதத்துடன்
செல்வோம்......

தைரியம் ஒன்றே
சிறந்த துணையாகும்
உலகில்,
எதையும் சாதிக்கும் வலிமை
இதற்கு மட்டுமே உண்டு
தடை விதிப்போரின்
தாடை உடைத்துப் புறப்படு,
தைரியம் விதைப்போரின்
தடம் பார்த்து நடையிடு !

வாழ்க்கையில்
வழிகளும் உண்டு
வலிகளும் உண்டு
எனவே,
தைரியமாய் நகரு !

நமக்கு நாமே ஆறுதல் கூறும்
மன தைரியம் இருந்தால்,
அனைத்தையும் கடந்து
போகலாம் !

தைரியம் என்னும் வாளை
கண்களில் வைத்துக்கொள்ளுங்கள்,
உங்களை விட சிறந்த பாதுகாப்பை
வேறு யாரும் உங்களுக்கு அளிக்க
முடியாது, சங்கடம் நிகழ்கையில்
சாதுர்யமாய் செயல்பட முயலுங்கள் !
உங்கள் துணிச்சலும் நேர்மையும்
உங்களின் பாதுகாப்பு !

சி. தேவிகா
முதுகலை முதலாம் ஆண்டு வணிகவியல்

இயற்கை கொடுத்த அனுபவம்

முன்னுரை :

“கலங்கிய நீரும், குளம்பிய மனமும்
ஒருநாள் தெளிந்தே தீரும்
கவலை வேண்டாம்
இதுவும் கடந்து போகும்”

என்பது போல் நாம் நம்முடைய வாழ்வில், இதுநாள் வரை நம் வாழ்க்கை எப்படி பயணிக்கிறது; என்ற தெளிவின்றி செய்த காரியங்கள் பல. ஆகவே, இந்த வாக்கியத்தின் மூலம் நான் கற்றுக்கொண்ட உண்மையை பின்வரும் எனது கட்டுரையில் காண்போம் வாருங்கள்;

மறுக்கமுடியாத உண்மை :

நமது அன்றாட வாழ்வில் எத்தனை வெற்றிகள், எத்தனை தோல்விகள், எத்தனை மகிழ்ச்சிகள், எத்தனை துக்கங்கள் எண்ணி பார்த்தால், ஒரு திமிரு கலந்த புண்முறுவலோடு வாழ்க்கையின் அழகை இரசிக்கத் தொடங்கினேன்.

நம்மைத் தேடிவந்த ஒன்று, நம்மைவிட்டுப் போவதால் அது நம்முடையதல்ல என்பது உறுவகியாகிறது. ஆகவே, போனதைப் பற்றி கவலைப்பட்டு இருக்கின்ற இந்த இரம்மியமான வாழ்க்கையை ஏன் இழக்க வேண்டும்? உதாரணமாக, நம் வாழ்வில் எத்தனை நண்பர்கள், எத்தனை பகைவர்கள், எத்தனை உறவுகள் அங்கம் வகித்தாலும், அவர்கள் நம்மிடம் வெறும் நினைவுகளை மட்டும் விட்டுவிட்டுச் செல்கிறார்கள்.

வாழ்வில் வந்ததெல்லாம் நம்மைக் கடந்து சென்று கொண்டு தான் இருக்கும். நாம் கடந்து சென்றதை மீண்டும் கொண்டு வர முடியாது; என்பதை உணர்ந்து செயல்பட வேண்டும். ஆகவே, இயற்கையின் விதியே இது என்று உளமார உணர்ந்து தெளியும் போது கிடைக்கும் அமைதி விலைமதிப்பற்றது; எனவே அந்த அமைதியை மனதில் நிரந்தரமாக்கிக் கொள்ளுங்கள்.

வெற்றி என்பதை எட்டிப் பறிக்க பாய்ந்து செயல்படுங்கள் சினம் கொண்ட வேங்கையைப் போல, வெற்றி உங்களுடையதே !

கொரனாவின் உச்சக்கட்டம் :

கொரனா என்ற ஒற்றை வார்த்தை உலகையே உலுக்கிக் கொண்டிருக்கிறது. நேற்று வரை இருமலும் தும்மலும் சாதாரணமாக இருந்தது இன்று வையகத்துக்கே சபிக்கப்பட்ட ஒன்றாக மாறிவிட்டது. இனம், மொழி, மதம், பணம் என்ற எந்த பாகுபாடும் இன்றி தொட்டால் ஒட்டிக் கொள்ளும், தொடாமலும் தொற்றி கொள்ளும். அன்று தீண்டாமையின் உச்சத்துக்கே சென்று உலகையே ஒதுக்கி வைத்துவிட்டது.

இதுவும் கடந்து போகும் :

காத்திருப்பு காலத்தை இதுவும் கடந்து போகும், என்று புரிந்துகொண்டு நம்பிக்கையோடு நகர்த்துவோம். நமக்காக போராடிக் கொண்டிருக்கும் மருத்துவர்களையும்,செவிலியர்களையும், நம்மால் ஈன்ற உதவிகளைச் செய்து பழைய உலகைப் படைக்க வெற்றி நடைபோட காத்திருக்கிறேன்.

வெற்றிகள் கிடைக்கும் போது, இதுவும் கடந்து போகும் என்பதை நினைவில் கொள்ளுங்கள், கர்வம் தலை தூக்காது.

தோல்விகள் தழுவும் போது, இதுவும் கடந்து போகும் என்பதை நினைவில் கொள்ளுங்கள்; சோர்ந்து விட மாட்டீர்கள்.

நல்ல மனிதர்களும், நல்ல நண்பர்களும் உங்கள் வாழ்க்கையில் வரும் போது, இதுவும் கடந்து போகும் என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

நெற்றி சுருங்கும் போதேல்லாம், இதுவும் கடந்து போகும் என்பதை நினைவில் கொள்ளுங்கள், சுருக்கம் போய் முகத்தில், புண்முறுவல் தவழக் காண்பீர்கள்.

முடிவுரை :

இதுவும் கடந்து போகும் என்பது, வெறும் ஒரு வாக்கியமாக கருதினால் வாழ்க்கையை அனுபவிக்க மறந்துவிட்டீர்கள். வாழ்க்கை என்ற வானத்தில் நட்சத்திரம் இல்லாத வெறும் வானமாக மாற்றுவது நீங்கள் ! நடந்ததை மறந்து நாளை என்ன நடக்குமோ? என்ற ஆர்வத்துடன் புறப்படுங்கள் ! வெற்றி நிச்சயம் ! நீ எடுக்காத ஒவ்வொரு முடிவுகளுக்கும் நீயே தான் அதிபதி. பிறர்மேல் மேற்கோள் காட்டி, நீ செய்கிற தவறுகளை மறைப்பதில் பயனில்லை இதுவும் கடந்து போகும் என்பதை, எண்ணி வாழ்க்கையின் ஒவ்வொரு முடிவுகளையும் சுயமாக கையாண்டு வாழ்க்கையை சிறப்புடன் வாழ வாழ்த்துக்கள்.

உங்கள் தோல்வி
எங்கு ஒளிந்துள்ளது தெரியுமா?
பிரச்சனைகள் வரும்போது அல்ல;
பிரச்சனைகளைக் கண்டு
நீங்கள் பயந்து விலகும் போது !
சிந்திப்பீர் ! செயல்படுவீர் !

ம. ஸ்ரீசண்முக சுந்தரி
முதலாம் ஆண்டு வேதியியல்

வாழ்க்கைக்கு வேண்டியது

வாழ்க்கையில்,
உணர வேண்டியது – உண்மை
அடைய வேண்டியது – ஆனந்தம்
அகற்ற வேண்டியது – கோபம்
வாங்க வேண்டியது – நற்பெயர்
காக்க வேண்டியது – மானம்
கேட்க வேண்டியது – வரம்
கொடுக்க வேண்டியது – அன்னம்
செய்ய வேண்டியது – தர்மம்
நினைக்க வேண்டியது – நன்றி !

வாழ்க்கையில் வெற்றிப் பெற வேண்டுமானால்
நல்ல நண்பர்கள் தேவை – ஆனால் வாழ்நாள்
முழுவதும் வெற்றிப் பெற வேண்டுமானால்,
ஓர் எதிரியாவது தேவை……
நீ பட்ட துன்பத்தை விட, அதில் நீ பெற்ற அனுபவமே சிறந்தது.
கோபம் என்பது பிறர் செய்யும் தவறுக்கு உனக்கு நீயே
கொடுத்துக் கொள்ளும் தண்டனை !
ஒருவன் சிரிக்கும் போதெல்லாம் அவரது மரணம் தள்ளிப் போடப்படுகிறது
உன்னை நீயே கட்டுப்படுத்தினால் உலகம் உன் கையில்
பலமுறை ஜெயித்தவன், ஒருமுறை தோற்றால் அது – விசித்திரம்
பலமுறை தோற்றவன், ஒருமுறை ஜெயித்தால் அது – சரித்திரம்
முடியாது என்று நீ சொல்வதை எல்லாம் யாரோ ஒருவர்
எங்கேயோ செய்து கொண்டிருக்கிறார்கள்…..
உங்கள் பாதையை நீங்களே தேர்ந்தெடுகள் – ஏனெனில்,
வேறு எவராலும் உங்கள் கால்களைக் கொண்டு நடக்க முடியாது !

ந. ரமா
பி.எஸ்.சி. கணிதம்
முதலாம் ஆண்டு

நீர்த்துளி வாழ்க்கை

இமை மூடி திறந்துபார்
பலனில்லை என்றால் கொஞ்சம் இதயத்தையும்
மூடிதிற...!

இந்த வாழ்க்கையில்
எதுவும் கடந்து போகும்,
பந்து போல் சுற்றி வரும்
பள்ளமும் மேடும்,
எந்தவொரு செயலும்
இல்லை நிரந்தரம்,
முந்தியோர் சொன்னவை
முற்றிலும் உண்மை !

பிறந்து வளர்வதும்
பின்னர் தளர்வதும்,
பறந்து திரிவதும்
அறுத்து முறிவதும்,
திறந்த வாசல்கள்
திரும்ப மூடுவதும்
நிரந்தரம் எதுவுமில்லை
நீர்த்துளி வாழ்க்கை !

வந்த மகிழ்ச்சிகள்
வாழ்க்கையில் நிலைக்காது,
நொந்து அழுவதும்
நூறு நாள் தாண்டாது,
பந்தா செய்வதும்
பயந்து தொய்வதும்,
எந்தப் பயனுமில்லை
எல்லாம் கடந்து போகும் !

பத்து வருடம் முன்னால்
பதற வைத்தவர்கள்,
அத்தனை அளவு தூரம்
ஆட்டவில்லை இன்று,
மொத்த மகிழ்வாய் இன்று
முன்னிருக்கும் சம்பவங்கள்,
அத்தனையும் மகிழ்வு தராது
ஐந்தாறு ஆண்டு பின்னால்,
ஒற்றை வரியில் சொல்வதானால்
ஒவ்வொன்றும் கடந்து போகும் !

இதுவும் கடந்து போகும்
என்று புரிந்து கொண்டால்,
எதுவும் வாழ்கையின்
இயல்பை மாற்றாது,
நதியின் வழியில்
நாடும் காடும்,
விதியின் வழியில்
விரும்பும் வெறுப்பும்,
பொதுவாய் இருக்கும்
புரிந்தவர் உயர்ந்தார் !

தி. வெண்ணிலா
முதுகலை முதலாம் ஆண்டு வணிகவியல்

இப்படிக்கு வாழ்க்கை.

உனக்கு இன்று ஏற்பட்ட
துன்பங்களுக்காக
மனம் வருந்தாதே !
ஏனெனில், அது தான்
உனக்கு வருங்காலத்தில்
எதையும் தாங்கும் வலிமையான
இதயத்தை
அளிக்க போகிறது,
துணிந்துசெல் துணிவுடன் வென்றுவிடலாம்
வாழ்க்கையை... !

உயர்ந்தவன் வாழ்க்கையைக்
குறிக்கோளாக எடுத்துக் கொள்
நீயும் சாதிக்கலாம் உலகில்... !

நீ ஒதுக்கப்படும் இடங்களில்
நிமிர்ந்து நில்,
நீ புகழ்ப்படும் இடங்களில்
அடக்கமாய் நில்,
நீ விமர்சிக்கப்படும் இடங்களில்
மௌனமாய் நில்,
நீ நேசிக்கப்படும் இடங்களில்
அன்புடன் நில்,
உலகம் உன் வசப்படும்....

வெறும் பெருமைக்காக
எதையுமே செய்யாதே,
உன் மனநிறைவுக்காக
உனக்கு பிடித்ததை
பெருமையோடு செய்... !

உன் மீது உனக்கே
நம்பிக்கை இல்லை என்றால்,
கடவுளே நேரில் வந்தாலும்
பயனில்லை... !

எப்போதும் அச்சத்தில்
இருப்பதை விட,
ஆபத்தை ஒருமுறை
சந்திப்பதே மேல் !
இந்த உலகில் தலைவிதி
என்று எதுவும் கிடையாது,
எல்லாம் நீயாக
தேடி கொண்டதுதான் !

பிறரை பற்றி விமர்சிக்கும்
முன்னர், நாம் அவர் இடத்தில்
இருந்திருந்தால் சரியாக
நடந்து கொண்டிருப்போமோ
என்று யோசித்து பாருங்கள்,
அதன் பின்னர் உங்கள்
மனம் சொல்லும் பிறரை பற்றி
விமர்சிக்க உமக்கு
தகுதி இருக்கிறதா என்று... !

உன்னால் ஓட முடிந்தால்
ஓடு,
நடக்க முடிந்தால்
நட,
தவழ முடியுமெனில்
தவழ்,
எப்படியானாலும் உன் பயணம்
முன்னோக்கி மட்டுமே
தொடரவேண்டும்...!

கொடுப்பது சிறியது என்று
தயங்காதே,
பெறுபவருக்கு அது பெரிது ;
எடுப்பது சிறிது என்று திருடாதே
இழந்தவருக்கு அதுவே பெரியது !

போகும் போதே என்னை
ரசித்து கொண்டே போ,
திரும்பி வரமாட்டேன் உனக்காக
இப்படிக்கு வாழ்க்கை !

நாம் வாழும் வரை
நம்மை யாரும்,
வெறுக்க கூடாது
வாழ்ந்து முடிந்து பின்பு,
நம்மை யாரும்
மறக்க கூடாது
அதுதான் நம் வாழ்வின்
வெற்றி... !

நீ எப்படி வாழனும் என்று
ஆசைப்படுகிறாயோ
அப்படியே வாழ்,
அதை விட்டுவிட்டு
யாருக்காகவும் நீ
இறங்கிப் போகாதே,
உன்னையும்
மாற்றிக்கொள்ளாதே
நிமிர்ந்து நில்... !

தன்னம்பிக்கையை மட்டும்
இழந்துவிடாதே,
இன்றைய தினம்
கடினமாக இருக்கலாம்,
நாளைய தினம் மிக மோசமான
தினமாகவும் இருக்கலாம்,
ஆனால் நாளைய மறுதினம்
நிச்சயம்
பிரகாசமாக இருக்கும்... !

துரோகங்கள் நமக்கு
கற்றுக் கொடுப்பவை
ஒன்று தான்,
சற்றே சுயநலமாய்
இருந்திருக்கலாம் என்று... !

நடக்கும் கால்களில்
எவ்வளவு
வித்தியாசம், ஒன்று
முன்னால்
என்றால் மற்றொன்று
பின்னால்
ஆனால், முன்னால் இருக்கும் கால்
கர்வப்படவும் இல்லை,
பின்னால் இருக்கும் கால்
அவமானப்படவும் இல்லை;
அவைகளுக்குத் தெரியும்
நிமிடத்தில் நிலைமை
மாறும் என்று !

சோகம் மட்டும்
வாழ்க்கை கிடையாது,
சந்தோஷமாகவே எந்நாளும்
வாழ்ந்திடவும் முடியாது,
சிமிட்டும் நம் இமைகள்
ஒரு நொடி இருட்டினால் தான்,
நம்மால் பல நொடி
வெளிச்சத்தில் வாழ முடியும்... !

ஒவ்வொரு தோல்வியும் ஓர்
அனுபவம்,
ஒவ்வொரு இழப்பும் ஒரு
இலாபம்,
ஒவ்வொரு ஏமாற்றமும் ஓர்
எச்சரிக்கை,
ஒவ்வொரு நஷ்டமும் ஒரு
பட்டறிவு,
ஒவ்வொரு காணாமல்
போதலும் ஒரு தேடல் !

பார்க்கக் கண்களைக்
கொடுத்த ஆண்டவன்,
பாராதிருக்க இமைகளையும்
கொடுத்திருக்கிறான்,
இரண்டையும் சரியான
சமயத்தில் பயன்படுத்துபவனே
புத்திசாலி !

நேற்று செய்ய வேண்டியதை
இன்று செய்தால்
சோம்பேறி..!
இன்று செய்ய வேண்டியதை
இன்றே செய்தால்
சுறுசுறுப்பானவர்...!
நாளை செய்ய வேண்டியதை
இன்று செய்தால்
வெற்றியாளர்...!

வாழ
வழியில்லையென்று
புலம்பாதே !
நீ பயணித்துக்
கொண்டிருப்பது தான்
உன் வாழ்க்கையென்று
முன்னேறு...!

நீ பட்ட துன்பத்தை விட
அதில்,
நீ பெற்ற அனுபவமே
சிறந்தது !

விடாமுயற்சியை – கடல் அலைகளிடமும்
கடமைதவறாமையைக் – கதிரவனிடமும்
உத்வேகத்தைக் – காட்டாற்றிடமிருந்தும்
புன் சிரிப்பைப் – பூக்களிடமிருந்தும்
சுறுசுறுப்பை – எறும்புகளிடமிருந்தும்
சேமிப்பைத் – தேனிக்களிடமிருந்தும்
பொறுமையைப் – பூமியிடமிருந்தும்
கருணையைக் – கடவுளிடமும்
கற்றுக்கொள் !

ப. உமாமகேஸ்வரி
முதலாம் ஆண்டு உயிரி தொழில் நுட்பத்துறை

ஏக்கங்கள்

வாழ்க்கை நம்வசம்

ஏக்கங்கள் என் மனதில் ஏராளம் – ஆனால்

ஏமாற்றங்கள் என் வாழ்வில் தாராளம்,

சந்தோசத்திற்கும் எனக்கும் சம்மந்தமில்லை – ஆனால்

என்வாழ்வில் துன்பத்திற்கு பஞ்சமில்லை,

இழந்த இடத்தை பிடித்து விடலாம் என்று நினைத்தேன் – ஆனால்

இழந்த காலத்தை ஒருபோதும் பிடித்துக்

கொள்ளமுடியாது என்று உணர்ந்தேன்,

வீழ்வது அவமானமென்று நினைத்தேன் – ஆனால்

வீழ்ந்தே கிடைப்பதுதான் அவமானம் என்று

கடைசியில் அறிந்தேன்,

ஆயினும் இதெல்லாம் ஒரு நாள் கடந்துபோகும்

என்று காத்திருந்தேன், ஆனால்

எதுவும் கடந்துபோகாது எல்லாம் பழகிபோகும் என்று

கடைசியில்தான் – உணர்ந்தேன்,

இதை அறிந்து நான்போகிறேன் என் வாழ்க்கையின்

வெளிச்சத்தைத் தேடி,

இனி எல்லாம் வரும் என்னை நாடி...!

ய. பவித்ரா

மூன்றாம் ஆண்டு வணிகவியல் பிரிவு : ஆ

கலங்காதே...

ஏ பெண்ணே !

மற்றவர்கள் உன்னை இழிவு

படுத்தும்போது அவர்களையும்,

அதை தட்டிக் கேட்கத் தைரியம்

இன்றி வெட்கமின்றி,

வேடிக்கைப் பார்த்துக்கொண்டு

இருப்போரையும்,

இனி கண் கலங்க வை

பெண்ணே...!

நீ கோழை இல்லை

உன் வலிமைகளால் எளிதில்

வெல்லும் திறன்

கொண்டவள்

இனி கலங்காதே கலங்கவை....!

து. ரஞ்சிதா

பி.ஏ. ஆங்கிலம் மூன்றாம் ஆண்டு

மோதிரத்தின் இரகசியம்

சிறுகதை

மன்னன் ஒருவர் தன் அரசவை அறிஞர்களிடம், நான் எனக்காக ஒரு மோதிரம் செய்யப் போகிறேன். இக்கட்டான கட்டத்தில் படித்தால், எனக்கு உதவக்கூடிய ஒரு சுருக்கமான செய்தியை அதில் வைத்திருக்க விரும்புகிறேன். அப்படி ஒரு செய்தி வேண்டும் என்று கேட்டார். பலமுறை முயன்றும் அரசவை அறிஞர்களால் இக்கட்டான கட்டத்தில் படித்தால் மன்னருக்கு உதவக்கூடிய ஒரு சுருக்கமான செய்தியைக் கண்டு பிடிக்க முடிவில்லை.

மன்னரிடம் ஒரு வயதான வேலையாள் இருந்தார். மன்னர் அவரை ஒரு வேலையாளாகக் கருதவில்லை; வயதின் நிமித்தம் அவரிடம் மிகவும் மரியாதை வைத்திருந்தார். அந்த வயதானவர் மன்னருக்கு உதவ முன் வந்தார். அவருக்கு ஞானி ஒருவர் கொடுத்த செய்தியை மன்னருக்குக் கொடுத்தார். கொடுக்கும்போது இதைப் படிக்க வேண்டாம். மோதிரத்தில் வைத்துக் கொள்ளுங்கள் எல்லாமே முடிந்து விட்டது; வேறு வழியேயில்லை எனும் சமயத்தில் இதைத் திறந்து பாருங்கள் என்றார்.

அந்த இக்கட்டான கட்டம் வந்தது; நாட்டின் மீது படையெடுப்பு நடந்தது. மன்னர் நாட்டைப் போரில் இழந்து தனது குதிரையில் தப்பித்து ஓடினார். பின்னால் எதிரிப் படையினர் துரத்தி வந்து கொண்டிருந்தனர். அப்போது பாதையும் முடிவுற்றது; வேறு வழியற்று ஒரு மலை முகடுக்கு வந்தார் மன்னர். கீழே பெரும் பள்ளத்தாக்கு, மறுபக்கம் எதிரிகள்.

மன்னருக்கு அப்போது மோதிரத்தின் நினைவு வந்தது. அவர் மோதிரத்தில் வைக்கப்பட்டிருந்த செய்தியை எடுத்தார். அதில் “இதுவும் கடந்து போகும்” என்ற வாசகம் இருந்தது. செய்தியின் படியே எதிரிப் படையினர் கடந்து சென்றுவிட்டனர். மன்னரும் இக்கட்டான கட்டத்தில் இருந்து மீண்டார். பின்னர் தன்னைப் பற்றிப் பெருமையாக உணர்ந்தார்.

மன்னரோடிருந்த அந்த வயதான வேலையாள், இதுவும் சரியான தருணம் அந்த வாசகத்தை திரும்பவும் பாருங்கள் என்றார். மன்னரோ ! என்ன சொல்கிறீர்கள் ? இப்போது நான் வெற்றி பெற்று இருக்கிறேன். மக்கள் கொண்டாடிக் கொண்டிருக்கிறார்கள் நான் இக்கட்டான நிலையில் இல்லையே என்றார்.

அந்த வயதானவர், அந்தச் செய்தி எந்தருணத்திற்கும் ஏற்றது. நீங்கள் தோல்வியுற்ற நிலையில் மட்டுமல்ல, வெற்றி பெற்ற நிலையில் கூட அச்செய்தி மாறாது. நீங்கள் இக்காட்டான நிலையில் இருக்கும்போது மட்டுமல்ல வெற்றியாளராக இருக்கும் நிலையில் கூட அது தேவைதான் என்று கூறினார்.

மன்னர் தன் மோதிரத்தில் இருந்த “இதுவும் கடந்து போகும்” என்ற செய்தியை மீண்டும் படித்தார். மகிழ்ச்சியான வெற்றியான நிலையில் கூட அமைதி அவரை ஆட்கொண்டது. வெற்றியும் தோல்வியும், இன்பமும் துன்பமும், மகிழ்ச்சியும் துன்பமும் கடந்து போகும்.

லோ. சிந்து பிரியா...

முதலாம் ஆண்டு வேதியியல்

மன தைரியம்....

ஒரு ஊரில் ஒரு முனிவர் இருந்தார். அவருக்கு, எல்லோருடைய கடந்த காலம் மற்றும் எதிர் காலத்தை சொல்லக் கூடிய ஆற்றல் இருந்தது. ஊர் மக்கள் எல்லோரும் அந்த முனிவருக்கு அதிக ஆதரவு கொடுத்தார்கள். அந்த ஊரில் உள்ள ஒரு பெண்ணுக்கு மனதில் ஒரு எண்ணம் தோன்றியது அவர் பொய் சொல்கிறாரா ? எல்லோரையும் ஏமாற்றுகிறாரா? என்பதை அறிந்து ஊரில், உள்ள எல்லோரையும் நம்ப வைக்க வேண்டும் என்று அவள் நினைக்கிறாள். அவள் உயிரோடு இருக்கும் ஒரு குட்டிப் பறவையை கையில் வைத்து இருக்கிறாள். அவள் அந்த கையை பின்னாடி மறைத்துக்கொண்டு முனிவரிடம் என் கையில் ஒரு குட்டிப்பறவை இருக்கிறது. அந்த பறவை உயிரோடு இருக்கிறதா? இல்லை இறந்து விட்டதா? என்பதை நீங்கள் சரியாக கூறினால், நான் உங்களை நம்புகிறேன் என்று கூறினாள் அந்த பெண். அந்த பெண்ணின் எண்ணம் என்னவென்றால், அந்த முனிவர் பறவை உயிரோடு தான் இருக்கிறது என்று கூறினால், அந்த பறவையின் கழுத்தை பிடித்து கொன்று விடலாம். உயிரோடு இல்லை என்று கூறினால் அந்தப் பறவையை உயிரோடு காட்டி, எல்லோரையும் நம்பவைக்க வேண்டும் என்று நினைத்தாள். முனிவரிடம் கேட்கிறாள். அந்த முனிவர் கூறுகிறார் அந்த பறவை உயிரோடு இருப்பதும், உயிரைக் கொல்வதும் உன் கையில் தான் உள்ளது என்று முனிவர் கூறுகிறார். அதைக் கேட்ட அந்த பெண்ணால் பதில் பேச முடியவில்லை. இன்றைக்கு நம் ஒவ்வொருவருக்கும் கடவுள் சொல்லக்கூடிய வார்த்தை இதுவாகத்தான் இருக்கும். நம் வாழ்க்கை எப்படி இருக்கும். இப்படியா? எப்படியா? அதுவா? இதுவா? என்பதை எந்த சூழ்நிலையில் கேட்டாலும் கடவுளின் பதில் அது உன் கையில் தான் இருக்கிறது என்று கூறுவார். இங்கு உன்கையில் என்பது நம் எல்லோருடைய உள்ளங்கை இல்லை. நம்மோட முடிவில், தன்னம்பிக்கையில், தேர்ந்தெடுப்பதில்தான் உள்ளது. நம்முடைய வாழ்க்கையில் எது இழந்திருந்தாலும், என்ன செய்திருந்தாலும், என்ன நடந்தாலும் நம் வாழும் வாழ்க்கை நம் கையில் தான் இருக்கிறது. வாழ்க்கையில், பெரிய குழப்பமான தத்துவங்கள் எல்லாம் எதுவும் இல்லை. நடப்பதற்கு முன் திட்டமிடனும், பாதுகாக்க வேண்டும், நடந்த பிறகு மனம் தளராமல் ஏற்றுக் கொள்ளும் மன தைரியம் வேண்டும்.

இதை தான் வள்ளுவர்,

ஊறொரால் உற்றபின் ஒல்காமைஇவ்விரண்டின்
ஆறென்பர் ஆய்ந்தவர் கோள்.

-திருவள்ளுவர்

பொருள்:-

வருமுன் காத்தல், வந்தால் தளராமைஇவ்விரண்டே, அறிஞர் கண்ட வழிகள் என வள்ளுவர் கூறுகிறார்.

ந. தீபிகா
வணிகவியல் அ பிரிவு

பெண் சுதந்திரம்

இதுவும் கடந்து போகும் என்று நினைத்து வாழ்ந்து கொண்டிருக்கும் ஒரு சராசரி பெண் நான். அப்படி தான் வாழ்க்கையும் இருந்தது. படிப்பு வேலை எல்லாமே போராட்டம் தான் எனக்கு சிறுவயதிலே அப்பா இல்லாமல் அம்மாவின் கடின உழைப்பால் ஏதோ கொஞ்சம் படித்தவள். வறுமை காரணமாக வேலை. அப்படி வேலைக்கு சென்று சில வருடங்களுக்கு பிறகு அன்றொரு நாள் எப்போதும் போலவே வீட்டிற்கு திரும்பி வந்து கொண்டிருந்தேன்.

போக்குவரத்து நெரிசல் காரணமாக, அன்று இரவு நேரம் பத்து மணியை கடந்தது. அம்மாவிடம் சீக்கிரம் வந்துருவேனு சொல்லிவிட்டு பேருந்து நிறுத்தத்தில் நின்று கொண்டு இருந்தேன். ஒரு கார் வாடகைக்கு ஒட்டுபவர், என் ஊரை தாண்டி சில கிலோமீட்டர்கள் தொலைவில் தான் அவர் வீடு உள்ளது. ஆனால், பேசியது இல்லை பார்த்துள்ளேன் அவருக்கும் என்னை தெரியும். என்னம்மா இந்த நேரத்தில் இங்க நிக்கிற? என்று கேட்க இல்லனா பஸ் லேட் ஆயிடுச்சு அதான் இங்க நிக்கிறேன். கடைசி பஸ்ஸீக்கு வையிட் பண்ணிட்டு இருக்கேன் அண்ணா என்று கூறினேன். சரி வாம்மா நான் உங்க ஊரை தாண்டி தான் போகனும் நான் இறக்கி விட்டுறேன் என்று அவர் கூறினார்.

வேணாம் அண்ணா, உங்களுக்கு எதுக்கு சிரமம் பஸ் வந்துரும் அண்ணா நீங்க போங்க, நான் பாத்துக்கிறேன் என நான் சொல்ல ஏம்மா நேரம் என்ன ஆச்சு, இந்த நேரத்தில் இங்க தனியா நிக்கலாமா? என்று கூறினார். வாம்மா நம்ம கார்ல பின்னாடி ஏறுமா பத்திரமா வீட்டு முன்னாடியே இறக்கி விட்டுறேன் என்று கூறினார். தெரியாத நபரா இவர் நமக்கு தெரிந்த முகம், நல்ல மனிதர் அவர் கூறுவதும் சரியே, நேரம் நடு இரவை தொட சென்று கொண்டிருந்தது என்ற எண்ணம் என்னுள் இருக்க காரில் ஏறினேன். மெதுவாக பேச்சு கொடுக்க தொடங்கினார். ஏம்மா எங்க வேலை பாக்குற? என்று கேட்க.

துணிக்கடையில் சேல்ஸ் கேள் அண்ணா என்று கூறினேன் திடீரென கார் நின்று ஆஃப் ஆனது. மனதில் திகீர் பயம் ஏற்பட்டது. அவர் ஸ்டார்ட் பண்ணி பார்க்க வண்டி ஸ்டார்ட் ஆகவே இல்லை. அண்ணா என்ன ஆச்சு? ஏன் கார் நின்னுடுச்சு என்று நான் பதட்டத்துடன் கேட்டேன்.

என்ன ஆச்சுனு தெரியலயேமா நீ காருக்குள்ளே இரு. நான் பாத்துக்கிறேன் என்று சொல்லி இறங்கி போனார். காருக்குள் இருப்பதால் ஒரு நிம்மதி இருந்தது. மறு ஒரு கார் பின்னால் வந்தது, அதில் நம்ம ஊருகாரர். நன்கு தெரிந்தவர் ஆயிற்றே நான் இறங்கி என்னை ஏற்றி வந்த கார் காரரிடம், அண்ணா ரொம்ப நன்றி என்று கூறி அந்த காரில் இடம் மாறினாள்.

அக்காரில் செல்லும் போது படபடப்பு அதிகமானது ; அக்கார் காரர் ஒரு நிமிடம்மா என்று கூறி, கை பேசியில் உரையாடினர் ஏன்? என இவள் சிந்திக்க !

கார்காரர் தொடர்ந்து பேச இவளுக்கு சந்தேகம் ஏற்பட்டு, ஒரு நிமிடம் இவள் கார்காரரை கவனிக்க... விஷியம்... அவளை கடத்துவது என அறிந்து இவள் தப்ப முயற்சித்து காரிலிருந்து கார் காரருக்கு, தெரியாமல் இறங்கி இவள் ஓடத் தொடங்கினாள்...

அந்நடு இரவில் பதட்டத்துடன் வீட்டை அடைந்த இவள் தன் தாயை கண்டு மகிழ்ந்தாள். தன் தாயிடம் ஏதும் கூறாமல் உறங்கச் சென்றாள். இச்சமூகத்தில் பெண் சுதந்திரம் இல்லை என உணர்ந்த இவளின் கதையில் இதுவும் கடந்து போகும்.

நா. மாலா
மூன்றாம் ஆண்டு – ஊட்டச்சத்து (ம) உணவு கட்டுபாட்டியல்

கனவும் நினைவும்

மெல்ல மெல்ல
விழி திறப்பாய்,
மெல்லிசையால் சொல் உதிர்ப்பாய்
கொல்லும் உனது புன்னகையில்,
முகச் சளிப்பு சேர்ந்திருந்தால்
சிப்பியினுள் சந்திரனும்
சிக்கியதாய் சிறு சலிப்பு !

ஆயிரம் ஆண்டுகள் ஆனாலும்
துருவிப் படிப்பேனே
எனினும்,
கற்க இயலா அற்புதம் நீ !
பூமி உருண்டை என்பதனால்
வான் பார்க்க யாரும்
புவி தோண்ட
எண்ணியதில்லை,
உன் அழகை
துளைத்து பார்க்க
உளி ஏந்திய
சிறு கண்ணி நான்
யுவன் வேண்டும்... பல யுகம் வேண்டும்
தொடந்து நீளும்,
கனவும்... நினைவும்...
முடிவுமில்லை.... முடியவுமில்லை
முடிசூடிக் கொண்டவள் நீ,
முழுமையாய் எதுவும் பெற்றதில்லை
உன்னை மனம் முடிந்து கொள்கிறேன்
நின்னை மனம் சூடிக் கொள்வேனே!

ஜோதிபிரியா குமார்
மூன்றாம் ஆண்டு உட்டசத்து & உணவு கட்டுபாட்டியில்

தேசிய அளவில
தொற்று நோய் விழிப்புணர்வு

முன்னுரை :

உடல் நலம் என்பது நீண்டகாலமாக உடல் மற்றும் மனம் சார்ந்தாகவும், உடலில் காணப்படும் சமனிலையை பொருத்தும் இருப்பதாகவும் கருதப்படுகிறது. நோய் என்பது பல வகைகளில் கருதப்படுகிறது. மனித மூலம் மற்றும் காற்றின் மூலம் எளிதாக பரவுதாக கூறப்படுகிறது. நம் உடலில் ஒரு குறிப்பிட்ட உறுப்பு அல்லது மண்டலம் பாதிக்கப்பட்டு இருந்தால் அதன் மூலம் நோய்கள் ஏற்படும்.

மனிதர்களில் காணப்படும் பொதுவான நோய்கள் :

நுண்கிருமிகள் மனிதர்களில் அதிகமான நோய்களுக்கு காரணமாக உள்ளன. இந்த கிருமிகள் வைரஸ், பாக்டீரியா, பூஞ்சைகள், புரோட்டோசோவா, தட்டைப்புழுவினங்கள் என பல வகையில் காணப்படுகின்றது. இந்த நோய் உண்டாக்குவது கிருமிகள் நோயூக்கிகள் எனப்படும்.

இது மனிதன் விலங்குகள் மூலம் நோய் தோன்றினால், நுண்ணுயிர்களின் திறன் அவற்றின் மூலம் நோய் உற்பத்தித் தன்மைபெரும்பாலும் தொற்று நோய்கள் ஆக அதிகரிப்பதற்கு காரணமாகும்.

நோய் கிருமிகளால் தோன்றும் நோய்கள் :

கிருமிகளால் பரவும் நோய் கொள்கையை இராபெட் கோச், லூயிஸ் பாஸ்டர் வெளியிட்டனர். ஒரு நுண்ணுயிரி அல்லது நோய் கிருமி மனித உடலுக்குள் நுழைந்து, வேகமாக வளர்ந்து தன் எண்ணிக்கையை பெருக்கி கொள்ளும். இவை நச்சுகளை உற்பத்தி செய்து விருந்தோம்பி நோயினை உண்டாக்குகின்றது. நோயுற்ற உயிரி நோய் அறிகுறிகளை வெளிப்படுத்துகிறது.

பாக்டீரியா உருமாற்றம் :

பாக்டீரியா உருமாற்றம் என்பது மரபுத்தகவல் கொண்ட செல்லமைப்பிழந்த அல்லது செல்லமைப்பு நீக்கப்பட்ட பாக்டீயாவில் ம்ஹிபு–க்கள் ஒரு செல்லில் இருந்து மற்றொரு வகையில் மாற்றுறப்படுகிறது.

இந்நிகழ்ச்சியில் 1928 –ல் இங்கிலாந்து மருத்துவர் அதிகாரியான கிரிப்பின் என்பவர் கண்டுபிடித்தார்.

பாக்டீரியா என்பது நுண்ணோக்கியின் மூலம் மட்டும் காணக்கூடிய ஒரு செல் புரோகேரியோட்டுகள் ஆகும்.

பாக்டீரியா மூலம் பரவும் நோய்கள் :

ஆன்த்ராக்ஸ் :

காரணி : பேசில்லஸ் ஆன்த்ராசில்

தீவிரவாதிகள் இதனை போரில் பயன்படுத்தி, நோயை பரப்பி மனித குலத்திற்கு தீங்கு விளைவிக்க ஏதுவான கிருமி.

காசநோய் :

காரணி : மைக்கோ பாக்டீரியும் ட்யூபெர் குளோசிஸ்

DOT முறையில் இதனை குணப்படுத்தலாம்.

வயிற்று போக்கு :

காரணி : பல பாக்டீரியாக்கள் இதற்கு காரணியாக உள்ளன (எ.கா) கோலி சிகெல்லா கம்பிலோ பாக்டர், சால்மோனல்ல மற்றும் கொலஸ்டிரியம் ஆகியவை ஆகும்.

டெட்டனஸ் :

காரணி : குளோஸ்ட்ரிடியம்டெட்டனி இந்நோய் பாதிக்கப்பட்டவர் தன்னுடை வாயை திறக்கமுடியாமல் அவரிப்படுவார்கள்.

நியூமோனியா :

காரணி : ஸ்ட்ரெட்டோகோக்கஸ் நியூமோனிய மற்றும் டிலோகோக்கஸ் நியூமோனியே எரித்ரோமைசின், டெட்ராசைக்லின் மற்றும் சல்போனமைட் மருந்துகள் மூலம் இதனை குணப்படுத்தலாம்.

கொரனோ வைரஸ் :

கொரனோவைரஸ் இந்நோய் சீனா நாட்டில் வுஹான் நகரில் இருந்து பரவியது. இந்த வைரஸ் காட்டுப்பூனை, வௌவ்வால் பாம்புகள் சீனா நகரில் உள்ள வுஹான் இறைச்சியின் மூலம் கொரனோ வைரஸ் பரவ தொடங்கியது. பின் சீனா நாட்டில் உள்ள மக்களுக்கு பரவியது. இது காற்றின் மூலம் மனிதர்களுக்கு எளிதில் பரவும் தன்மைகொண்டது. இந்நோய் உயிரினங்களிடமிருந்து மனிதர்களுக்கு பரவியது பின் ஒரு மனிதனிடம் இருந்து மற்றொரு மனிதனிக்கு நோய் பரவியது. இதற்கு COVID –19 என்று பெயர் இடப்பட்டது. கொரனோ வைரஸ் இந்த நோய்க்கு பலலட்சம் பேர்கள் இறந்துபோனர்கள். கொரனோ அறிகுறிகள் இருந்தால், மருந்துவ பரிசோதனை செய்து கொள்ள வேண்டும். இந்நோய் நம் இந்தியா நாட்டிலும் பரவியுள்ளது. உலகில் உள்ள பிற நாடுகளான ரஷ்யா, ஐரோப்பா என பல நாடுகளுக்கு கொரனோ வைரஸ் பரவியுள்ளது. இதனை உலக சுகாதர அமைப்பு தெரிவித்துள்ளது. இதற்கு மருந்து கண்டுபிடிக்க பதினொரு மாதங்கள் ஆனாது.

நோய் பரவாமல் தடுக்கும் வழிமுறைகள் :

- கைகளை சுத்தமாக கழுவுதல்
- முககவசம் அணியுதல்
- கூட்டம் கூடாமல் இருத்தல்
- பொது இடங்களில் சமூக இடைவெளி கடைப்பிடித்தல்
- சளி, இருமல், காய்ச்சல் இருந்தால், மருத்துவ பரிசோதனை செய்து கொள்ளுதல்
- கொரனோ நோய் இருந்தால் தனிமைபடுத்திக் கொள்ளுதல்
- நோய்யைப் பற்றி பிறருக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துதல்

கொரனோ வைரசை ஒழிக்க (இன்றைய தனிமை – நாளைய இனிமை)

முடிவுரை :

நம் உணவு பழக்கம், உடற்பயிற்சி, ஓய்வு மற்றும் அன்றாடம் நாம் செய்யும் வேலைகளை பொறுத்து பாதிப்புகள் ஏற்படுகிறது. நாம் வாழும் காலம் வரை ஆரோக்கியமாகவும் நோய்கள் இல்லமால் வாழ வேண்டும்

நோய்யற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்

பி. சைத்ரா
இரண்டாம் ஆண்டு – மேலாண்மைத்துறை

நாட்டை உலுக்கிய அசூரன்

கடந்த ஆண்டு 2020, மார்ச் மாதத்திலிருந்து கொரோனா என்னும் கொடிய (தீராத) நோய் தமிழகம் (ம) இந்தியாவை தாக்கியது இதைப்பற்றிய கட்டுரையைக் காண்போம் :

கஷ்டங்களும் – கடந்து போகும் :

- கொரோனாவின் தாக்கத்தால் தமிழகம் (ம) இந்தியாவில் **"பொது முடக்கம்"** அமலுக்கு வந்தது.
- இதனால் மக்களுக்கு **பொருளாதார நெருக்கடிகள்** ஏற்பட்டது.
- கூலித்தொழிலாளர்கள் அன்றாட உணவிற்கே மிகவும் கஷ்டப்பட்டனர்.
- மக்களின் அன்றாட வாழ்க்கை பாதிக்கப்பட்டது.
- மக்கள் அனைவரும் வாழ்க்கையை மாற்றும் சூழ்நிலை ஏற்பட்டது.

பயங்கள் நீங்கும் :

கொரோனா நோய் பரவும் முறை மற்றும் நோய்க்கான தடுப்பூசி கண்டறிவதில் உலக நாடுகள் அனைத்தும் **"கண்விழி பிதிங்கி"** நிற்கின்றனர்.

இதனால் மக்கள் அனைவரும் மனவருத்தம், மனக் குழப்பம், மனரிதியான பாதிப்பு மற்றும் பயம் கொண்டுள்ளனர்.

பயங்கள் நீங்கி "கொரோனா இல்லாத உலகை" காண வேண்டும் என்று உறுதி கொள்வோம்.

பயம் நீங்கி நம்மை நாமே பாதுகாப்போம் !

இயல்பு நிலைக்கு நமது நாடு திரும்பும் :

தற்போது நமது மாநிலம் (ம) நாட்டில் கொரோனாவின் தாக்கம் சற்று குறைந்து வந்த நிலையில், நமது மாநிலத்தில் (தமிழ்நாடு) கல்லூரிகள், பள்ளிகள், தியேட்டர்கள் (ம) இரயில், பேருந்து பயணங்கள் சற்று இயல்பு நிலைக்கு நம்மை மாற்றியுள்ளது. வருங்காலம் (அ) வரும் நாட்களில் சற்று என்ற நிலை மாறி, முழுமையாக நமது நாடு இயல்பு நிலைக்கு திரும்ப அனைவரும் ஒத்துழைப்பு அளிக்க வேண்டும்.

உறுதி வேண்டும் ! உறுதி வேண்டும் :

அனைவரும் மனஉறுதி கொள்ள வேண்டும். கொரோனாவிலிருந்து அனைவரும் அதாவது, நமது நாடு (ம) மாநிலம் கூடிய விரைவில் மீண்டு வரும் என **"மன உறுதி கொள்வோம்"**

உறுதி கொள்வோம் !

உறுதி கொள்வோம் !

மன உறுதி கொள்வோம் !

தடுப்பூசி – நம்பிக்கை வேண்டும் :

இன்றளவிலும் கொரோனாவிற்கான தடுப்பூசி கண்டறியப்படவில்லை

தடுப்பூசி கண்டறிவதில் மருத்துவர்கள் (ம) அறிஞர்கள் முழு ஈடுபாடு காட்டி வருகின்றனர்.

மக்கள் **தடுப்பூசி கண்டறிவதில் தாமதம்** ஏற்படுவதால் பயம் கொண்டுள்ளனர்.

மக்கள் பயம் நீங்கி, மருத்துவர்கள் மற்றும் அறிஞர்கள் மீது நம்பிக்கை கொள்ள வேண்டும்.

நம்பிக்கை கொள்வோம்

நம் உலகை நம்வசம் கொள்வோம்....

மருத்துவ துறை – சுகாதார துறை :

மருத்துவ துறையினர் மற்றும் சுகாதார துறையினர் தமது உயிரைப்பற்றி சிறிதும் எண்ணாமல், அச்சமிருந்தும் தமது சேவை மனப்பான்மைக்காக சேவை செய்தனர்.

மருத்துவ (ம) சுகாதார துறையினர் அவர்களுடைய உறவினர்கள் (ம) குடும்பத்தை பிரிந்து சேவைகளை செய்துள்ளனர்.

மருத்துவ (ம) சுகாதார துறையினரின் உழைப்பு (அ) சேவைகளுக்கு நாம் – நன்றி தெரிவிக்க வேண்டும்.

அதற்கு மாறாக, அச்சம் (ம) வெறுப்பை அவர்களிடம் வெளிப்படுத்துவது மிகவும் தவறான செயல்பாடாகும்.

இறைவனுக்கு இணையாக
மருத்துவ (மற்றும்) சுகாதாரதுறையினரை
மதிப்போம் !

தனித்திரு ! விழித்திரு !

வீட்டிலிரு ! விழிப்போடு இரு !

முகக் கவசம் உயிர்க்கவசம் !

சமூக இடைவெளியை பின்பற்று !

பாதுகாப்பான வாழ்வைப் பெறுவோம் !

கோ. திரிஷா.
முதலாம் ஆண்டு வணிகவியல் பிரிவு – ஆ

தேடலின் சுகம்

செல்லும் பாதையில்
நிறைவாய் செய்ய வேண்டிய
செயல்கள்,
நிறைய இருக்கும் குறைகள்
பற்றி சிந்திக்காதே,
தோல்வி பயத்தில் தயங்கி
நிற்பதை விட
துணிந்து தோற்று நிற்பது
அழகானது !
வெற்றி உன்னை எல்லோருக்கும்
அறிமுகம் செய்யும்,
தோல்வி எல்லோரையும் உனக்கு
அறிமுகம் செய்யும்,
முயற்சி செய்ய தயங்காதே
முயலும் போது உன்னை
முட்களும் முத்தமிடும்.... !
கடினமான வாழ்க்கை என்று கலங்காதே
அங்கே தான், நம் வாழ்வை உயர்த்தும்
சந்தர்ப்பங்கள் ஒளிந்திருக்கும் ;
வாழ்வில் நீ வெற்றி பெரும் போதெல்லாம்
தோல்வி உன் நினைவில் வந்தால் உன்னை
வெல்ல யாராலும் முடியாது ..!
நம்பிக்கை என்பது வெற்றியோடு வரும் ஆனால்,
வெற்றி என்பது நம்பிக்கை உள்ளவரிடம்
மட்டும் தான் வரும்... !
எட்டிப் பிடிக்கும் தூரத்தில் வெற்றி
இல்லை அதை விட்டுவிடும் எண்ணத்தில்
நானும் இல்லை ;
கஷ்டங்கள் மட்டும் இல்லையென்றால்
போராடும் எண்ணமே நமக்கு இல்லாமல்
போய்விடும்
வாழ நினைப்பவனுக்கு வானம் கூட
வாயிற் படி தான்.... !
உன் மனம் ஒன்றே உன்னை வீழ்த்தக்
கூடிய ஒரே ஆயுதம் ; அது தெளிவாக
இருக்கும் வரையில் நீ ஒருவராலும்
வீழ்த்தப்படுவதில்லை !

சுமைகளை கண்டு நீ துவண்டு விடாதே
இந்த உலகத்தை சுமக்கும் பூமியே
உன் காலடியில் தான் !
உங்கள் பாதையே நீங்களே தேர்ந்தெடுங்கள்
ஏனெனில், வேறு எவராலும் உங்கள்
கால்களைக் கொண்டு நடக்க முடியாது
உன்னால் சாதிக்க இயலாத காரியம்
என்று எதுவும் இருப்பதாக ஒருபோதும்
நினைக்காதே !
எதுவும் இல்லாத போது சமாளிக்கும்
திறமையும்,
எல்லாம் உள்ளபோது நீ நடந்து கொள்ளும்
முறையும் ,
வெற்றியை தீர்மானிக்கிறது... !
விழுவதெல்லாம் எழுவதற்குத்தானே தவிர
அழுவதற்காக அல்ல,
மனமிருந்தால் கதிரவனும் உன்
கையினுள்ளே !
காத்திருக்கிறேன் கனவுகளோடு,
வாய்ப்புகள் வாயில் சேருமோ ?
மறைவில் இருக்கிறேன் முன்னேறி பாய்ந்து
இலக்கை அடைந்திட,
சிறகுகள் இருந்தும் சிறை பட்டு கிடைக்காதே !
உனக்கு சிறகுண்டு என சொல்ல இங்கே
யாரும் இல்லை,
உன் சிறகுகளை விரிக்க நீயே கற்றுக்கொள் !
நீ உன் சிறகுகளை விரிக்க
கற்றுக் கொண்டால்,
உன் சிறகுகளை நசுக்க ஆயிரம் எதிரிகள்
வருவார்கள்
ஆனால், அவர்கள் உன்னிடம்
நெருங்கும் முன்பே உன் சிறகுகளை விசிறி
பறந்து மேல போவீர்,
அந்த வானம் உனக்கு அங்கே காத்து கிடக்கிறது
உனக்கான தேடலை தொடர்ந்து பயணம் செய் ;
எல்லைகள் இல்லாமல் தேடு ! இடை விடாமல் தேடு !
ஒரு நாள் உன் இலக்கு உனக்கு வசப்படும் !
அன்று உன் தேடலின் சுகம் அறிவாய் !!!

சு. அம்பிகா
முதலாம் ஆண்டு உயிரி தொழில்நுட்பவியல்

Science Expo

Consumer Club



College Activities

Parent Teacher Meet

NSS, RRC & YRC

Placement

AESTHETICA


POSITIVITY

SALUTE TO
CORONA FIGHTERS

KAVYA.M



If you want to fly,
give up
everything ..... that
weighs you down
By:


NEVER LAUGH AT OR JUDGE SOMEONE BECAUSE YOU NEVER KNOW, SOMEDAY YOU MIGHT FIND YOURSELF IN THE SAME SITUATION

YOU'RE AMAZING, DO YOU KNOW THAT EVERYONE WANTS TO BE LIKE YOU. YOU ARE THE ESSENCE OF COOL. CHRIST, PEOPLE GET TATTOOS OF YOU!
WHAT FALCONS THINK
Think Positive

Stop The Spread
For You! For Them! For Us!
Victory Begins At Home

CORONAVIRUS
TAMIL NADU
COVID-19

Best
Comes
Hardest
Climb


Lifestyle
BE ACTIVE
BE HEALTHY
BE HAPPY

Time flies
but
you are the Pilot

HALF FILLED I CAN LIVE
STAY POSITIVE

Overcoming Depression

"A DROP OF WATER IS
WORTH MORE THAN A
SACK OF GOLD TO A
THIRSTY MAN!
KAVYA M


+VE PERSON
GOOD
VERY WELL RIGHT
AWSOME NICE
BEAUTIFUL
WONDERFUL
EXCELLENT
THINK GOOD
TALK GOOD
DO GOOD
MAKE YOU FEEL GOOD
-VE PERSON
BAD
WRONG
POOR
WHAT A PITY
EVIL HATE
THINK BAD
TALK BAD
DO BAD
MAKE YOU FEEL BAD
SABA ANJUM
I BSC MATHS


Your mind is a powerful thing when you fill it with POSITIVE thoughts your life will start to change...

REMEMBER THAT THE REASON YOU'RE DOING THIS IS TO MAKE YOUR LIFE BETTER.
BE POSITIVE YOU CAN DO ANYTHING

DON'T TELL ME THE MOON

POSITIVITY

Focus on where you want to go
not on what you
Fear....


"Yesterday Is Gone.
Tomorrow Has Not Yet
Come. We Have Only
Today. Let Us Begin.."

Overcoming Depression

You're
Prettier
when
You're
happy

Every Successful Person Has
A Painful Story
Every Painful Story Has
A Successful Ending
Accept the
Pain & Get
Ready for the
Success

If You Don't Like
Something Change It; If You
Can't Change It, Change the
Way You think About It...

POSITIVITY...
CORONA
FIGHTERS

YOUR MIND IS A GARDEN
YOUR THOUGHTS ARE THE SEEDS
YOU CAN GROW FLOWER OR
YOU CAN GROW WEEDS...
BSC-C.S

Get Ready To
Fly
Your Journey
Is Just
Beginning

DONT PANIC
WASH YOUR
NO TOUCHY

BE LIKE A TREE

EAT HEALTHY
STAY HEALTHY


Think
Be



START THINKING POSITIVE
Which Step have You Reached Today?

TODAY'S SOCIETY
HELP!


COVID-19


A good teacher is like a candle
It consumes itself
to light the way for others


MASK









मंज़िल
Khushi

BE Positive
DON'T
stress,
DO YOUR BEST
FORGET
THE
REST
M. AFIYA
AFSHAN
I BSc CS

HOPE

anchors
the
soul

Hebrews 6:19

✆ 04344 - 274453, 9894905338

✉ stjoseph.college10@gmail.com

www.stjosephcollege.edu.in